*Clipping*


| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Publication** | : | The Hindu | **Date** | : | Friday, August 2, 2024 |
| **Edition** | : | Chennai | **Page** | : | 4 |


# T.N. government will continue prioritising education: Stalin

Speaking at Loyola College's centenary celebrations, he says obstacles to education have emerged in new forms to dilute its significance. These hurdles will be faced politically, the Chief Minister says

The Hindu Bureau
CHENNAI

There were "obstacles" to education in "new forms" and talks aimed at diluting its significance had emerged, Chief Minister M.K. Stalin said on Thursday, and added that he would face these politically.

Speaking at the centenary celebrations of Loyola College here, he said his government had been according priority to education and would continue to do so.

He emphasised that students should continue their pursuit of education.

Underlining the identity of Loyola among other educational institutions, he expressed disappointment that he was not a student of the institution.

Tracing the legacy of Loyola College to its founder and Jesuit priest Fr. Francis Bertram, S.J., Mr. Stalin said the institution opened its gates for students from various socio-economic backgrounds at a time when only a few were considered privileged to pursue higher education.



Chennai Jesuit Province's Provincial Rev. J. Irudayaraja, S.J. presenting a memento to Chief Minister M.K. Stalin at the Loyola College centenary celebration on Thursday. R. RAGU

As Loyola figured among the top 10 institutions in the country, he said many institutions with similar standing were in Tamil Nadu and recalled the efforts taken by the Justice Party to develop education in the State.

"We follow the path paved by the Justice Party. Naturally, we accorded priority to education, have been doing so, and will continue to do so," Mr. Stalin said.

Pointing out that his son and Minister of Youth Welfare and Sports Development Udhayanidhi Stalin was an alumnus of Loyola College, Mr. Stalin said his visit to the college on Thursday was not just as the Chief Minister but also as the parent of a former student.

Assembly Speaker M. Appavu, Ministers K. Ponmudy and P.K. Sekarbabu, Chennai Central MP Dayanidhi Maran, Legislators N. Ezhilan and S. Inigo Irudayaraj, State Minorities Commission chairperson Fr. Joe Arun, S.J., Chennai Jesuit Province's Provincial Rev. J. Irudayaraja, S.J., Rector Rev. Antony Robinson, S.J., Secretary Rev. B. Jeyaraj, S.J., and Principal Rev. A. Louis Arockiaraj, S.J., were among those present.

# Clipping

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Publication** | : | Daily Thanthi NEXT | **Date** | : | Friday, August 2, 2024 |
| **Edition** | : | Chennai | **Page** | : | 5 |

---

**CHENNAI: Chief Minister MK Stalin on Thursday said that new forms of deterrence to education have started manifesting in the country.**

Speaking at the inauguration of the centenary year celebration of Loyola College in the city.

CM Stalin said that the importance of education must be ingrained in the students as new forms of deterrence to education have started manifesting.

Cautioning that speeches belittling the importance of education have started doing rounds again, the Chief Minister said, "We will handle it on the political front. You (students) must focus on the journey on the knowledge front."

Stating that Loyola was one of the many important institutions that opened its wide doors of education to all at a time when restrictions on "who could learn and who could not learn" were dominating the society.

CM Stalin said that the institution opened the eyes of education to economically backward students in the society. Claiming credit for the state being home to some of the leading colleges in almost all specialisations, the CM said, "It is because of the education revolution engineered by the Justice Party which believed that education alone would break all the barriers of a person. We hail from the Justice Party. Hence, we attach and still attach so much importance to education. It is our belief that we will continue to attach that importance to education."

## CM distributes travel kit to overseas Tamil youths on 'tour of motherland'

Earlier in the day, the Chief Minister distributed travel kits to 100 overseas Tamil youth, who are here as a part of the Vergalai Thedi (Tracing the Roots) scheme under which the state sponsors a 15-day tour of the state to 100 overseas Tamil youth to reconnect with the motherland and renew their ties with the Tamil homeland. Select expatriate Tamil youth aged between 18 and 30 years, would be brought and taken on a tour to historically significant places in Tamil Nadu to help them understand the pride of Tamils and Tamil Nadu.

*Clipping*

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Publication** | : | The Times of India | **Date** | : | Friday, August 2, 2024 |
| **Edition** | : | Chennai | **Page** | : | 4 |

# Stalin unveils Loyola's centenary celebrations

TIMES NEWS NETWORK

**Chennai:** Heaping encomiums on Loyola College on its centenary celebrations on Thursday, chief minister M K Stalin said he was proud to see politicians, former union ministers, advocates and sports persons as alumni.

"I hope to see more students excel," Stalin said.

Inaugurating the festivities amid a large gathering of students, faculty and alumni of the college at its Nungambakkam campus on Thursday, Stalin said: "Among the colleges in the city, Loyola stands out. Be it sports or art, we often see Loyola students excel in these fields. It is a matter of pride to see an institution in the city shine for over 100 years."

The chief minister was accompanied by higher education minister K Ponmudy and DMK's Chennai (Central) MP Dayanidhi Maran, himself an alumnus.

Loyola has lined up several projects to celebrate the milestone. The upcoming Shyam Kothari centenary building will have 66 classrooms and four grand halls. "The aim is to accommodate more students," said J Anthony Robinson, rector of Loyola Institutions.

It also aims to raise a ₹100 crore scholarship corpus fund to benefit 1,500 students annually. To engage with its global alumni network, the college will host an international alumni day event in Dubai this month.

C Suresh Kumar



**STORIED LEGACY:** M K Stalin at Loyola College on Monday

*Clipping*


| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Publication** | : | The New Indian Express | **Date** | : | Friday, August 2, 2024 |
| **Edition** | : | Chennai | **Page** | : | 2 |


# It's golden period for edu, research in TN, says CM

**EXPRESS NEWS SERVICE**
@Chennai

CHIEF Minister MK Stalin on Thursday said the state is witnessing a golden period for higher education and research under the present 'Dravidian model' of government.

Speaking at the centenary year inaugural celebration of Loyola College, Stalin said the regime of the late CM K Kamaraj was a golden period for school education and that of late CM M Karunanidhi was a golden period for higher education. Similarly, it is a golden period for higher education and research under the present Dravidian model of government, he said.

Recalling that there was a time when education was not available to all, he said Loyola College stood apart as it opened its doors for everyone. "The college helped students from socially and economically disadvantaged sections to get higher education," he said.



Stalin speaking at the centenary celebrations of Loyola College | EXPRESS

Stating that the college is among the best in the country, Stalin expressed regret that he could not study in the institution. He, however, pointed out that his son and minister Udhayanidhi Stalin was a student of the college.

*Clipping*



| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Publication** | : | Dinamani | **Date** | : | Friday, August 2, 2024 |
| **Edition** | : | Chennai | **Page** | : | 3 |



# தமிழகத்தில் உயர் கல்வியின் பொற்கால ஆட்சி

**முதல்வர் மு.க.ஸ்டாலின்**



சென்னை லயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு உள்ளிட்டோர்.

சென்னை, ஆக. 1: தமிழகத்தில் உயர் கல்வியின் பொற்கால ஆட்சி நடை பெற்று வருவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

சென்னையில் வியாழக்கிழமை நடைபெற்ற லயோலா கல்லூரி நூற்றாண்டு தொடக்க விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சென்னையில் எத்தனையோ கல்லூரிகள் இருந்தாலும் லயோலா தனித்துத் தெரியும். கல்வி, விளையாட்டு, கலை என அனைத்திலும் லயோலா கல்லூரி மாணவர்கள் தனியாகத் தெரிவார்கள்.

இங்கே நான் படிக்கவில்லை. எனினும், எனது மகனும், அமைச்சருமான உதயநிதி படித்தது லயோலா கல்லூரியில்தான். அந்த வகையில் பார்த்தால் இந்த நிகழ்ச்சிக்கு, முதல்வராக மட்டுமல்ல, மாணவரின் பெற்றோராகவும் வந்திருக்கிறேன்.

சென்னையைச் சுற்றி மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்க ஏராளமான கல்லூரிகளையும், பல்கலைக்கழகங்களையும் உருவாக்கியிருக்கிறோம். நூறு ஆண்டுகளுக்கு முன்பாக, தமிழ்நாடு முழுவதும் இருந்த கல்லூரிகளை விரல்விட்டு எண்ணி விடலாம். கல்விதான் அழிக்க முடியாத செல்வம் என்று சொல்கிறோம். அந்தச் செல்வம் அந்த காலத்தில் எல்லோருக்கும் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லை என்பதைவிட கொடுக்கப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். அப்படிப்பட்ட காலத்தில் லயோலா கல்லூரி தொடங்கப்பட்டது.

இன்னார்தான் படிக்கலாம், இன்னார் படிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் தலைவிரித்து ஆடிய காலத்தில் அனைவரும் படிக்கலாம் என்ற பெரிய வாசலைத் திறந்து விட்ட எத்தனையோ கல்லூரிகளில் லயோலா கல்லூரியும் மிகவும் முக்கியமான ஒன்று.

தலைசிறந்த கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், கல்வி நிறுவனங்கள் அதிகம் உள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது. இதற்குக் காரணம், தமிழ்நாட்டில் கல்வி புரட்சியைத் தொடங்கி வைத்த நீதிக்கட்சிதான். அந்தக் கட்சியின் வழிவந்த நாங்கள், கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறோம்.

**கல்விக்கான தடைகள்:** நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன் என கல்வி தொடர்பாக ஏராளமான திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளோம்.

முன்னாள் முதல்வர் காமராஜரின் ஆட்சிக் காலம் பள்ளிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. முன்னாள் முதல்வர் கருணாநிதியின் ஆட்சிக் காலம், கல்லூரிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. இன்றைய திராவிட மாடல் ஆட்சி உயர் கல்வியின் பொற்காலமாக, ஆராய்ச்சிக் கல்வியின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது.

கல்லூரியில் படிக்கும் வாய்ப்பு கிடைத்துள்ள மாணவர்கள் அனைவரும் அதனை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வியின் தேவையை அடுத்தடுத்து வருகின்ற மாணவர்களிடம் பதிய வைக்க வேண்டும். கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வரத் தொடங்கியிருக்கிறது. கல்வியின் முக்கியத்துவத்தைக் குறைக்கின்ற மாதிரியான பேச்சுகள் மீண்டும் எழத் தொடங்கியுள்ளன. அதையெல்லாம் அரசியல் களத்தில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். மாணவர்கள் அறிவுக் களத்தில் உங்களது பயணத்தைத் தொடர்ந்திட வேண்டும் என்றார் முதல்வர் மு.க.ஸ்டாலின்.

இந்த நிகழ்ச்சியில், சட்டப் பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர்கள் க.பொன்முடி, பி.கே.சேகர்பாபு, மக்களவை உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டப் பேரவை உறுப்பினர்கள் எழிலன், இனிகோ இருதயராஜ் உள்பட பலர் பங்கேற்றனர்.

**SK Communications**

*Clipping*

| | | | |
|---|---|---|---|
| **Publication** : Dinakaran | | **Date** : Friday, August 2, 2024 | |
| **Edition** : Chennai | | **Page** : 5 | |


இந்தியாவில் எந்த கல்வி நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும்

# தலைசிறந்த கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் அதிகம் இருக்கும் மாநிலம் தமிழ்நாடு

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்




▶ சென்னை லயோலா கல்லூரியின் நூற்றாண்டு தொடக்க விழாவை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்தார். அவருக்கு லிபா இயக்குனர் ஜோ அருண் புத்தகம் பரிசளித்தார். அருகில், சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, அமைச்சர்கள் பொன்முடி, சேகர்பாபு, எம்பி தயாநிதி மாறன், இயேசு சபை மாநில தலைவர் ஜெபமாலை இருதயராஜ், லயோலா கலைமனைகள் அதிபர் அந்தோணி ராபின்சன், செயலாளர் போனிபஸ் ஜெயராஜ், கல்லூரி முதல்வர் லூயிஸ் ஆரோக்கியராஜ், முன்னாள் மாணவர் சங்க தலைவர் விஸ்வநாதன்.

சென்னை, ஆக. 2: இந்தியாவில் எந்த வகையான கல்வி நிறுவனத்தை எடுத்துக்கொண்டாலும் அதில் தலைசிறந்த கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் அதிகம் இருக்கும் மாநிலமாக தமிழ்நாடுதான் இருக்கிறது என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதத்துடன் கூறினார்.

சென்னை லயோலா கல்லூரியில் நேற்று நடந்த நூற்றாண்டு தொடக்கவிழாவில் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:

சென்னையில் எத்தனையோ கல்லூரிகள் இருந்தாலும் லயோலா மட்டும்தான் தனித்துத்தெரியும். கல்வி, விளையாட்டு, கலை என அனைத்திலும் லயோலா மாணவர்கள் தனித்துவமாக தெரிவார்கள். ஏராளமான சாதனையாளர்களை உருவாக்கி இருக்கக் கூடிய கல்லூரி. இங்கு நான் படிக்காமல் சென்று விட்டேனே என்ற வருத்தம் இருக்கிறது. 'லயோலா' என்று சொன்னாலே, அது ஒரு பெருமைதான், ஒரு கெத்து தான். என்னுடைய மகன், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி மட்டுமல்ல, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், அவரது அண்ணன் சன்டிவி கலாநிதி மாறன் என எல்லோருமே இந்த கல்லூரியில்தான் படித்திருக்கிறார்கள். நான் மட்டும் தான் மிஸ் ஆகிவிட்டேன்.

அருட்தந்தை பிரான்சிஸ் பெட்ரம் எஸ்.ஜெ மற்றும் அவருடைய சக இயேசு சபை அருட்பணியாளர்கள் இந்த கல்லூரியை சேவை நோக்கோடு தொடங்கினார்கள். தலைவர் கலைஞர் பிறந்த 1924ம் ஆண்டில்தான் இந்த நிறுவனத்துக்கும் அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. 1925ம் ஆண்டு தன்னுடைய கல்விப் பணியை இந்தக் கல்லூரி தொடங்கியுள்ளது. இன்னார் தான் படிக்கலாம் - இன்னார் படிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் தலை விரித்து ஆடிய காலத்தில் அனைவரும் படிக்கலாம் என்ற பெரிய வாசலை திறந்து விட்ட எத்தனையோ கல்லூரிகளில் லயோலா கல்லூரியும் மிகவும் முக்கியமான ஒன்று. சமூகத்தில், பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்விக் கண்ணைத் திறந்து விட்ட இந்தக் கல்லூரி, நாட்டின் முதல் 10 சிறந்த கல்லூரிகளில் ஒன்றாக இருக்கிறது.

இந்தியாவில் எந்த வகைப்பட்ட கல்வி நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும் அதில் தலைச்சிறந்த கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், கல்வி நிறுவனங்கள் அதிகம் இருக்கும் மாநிலமாக தமிழ்நாடுதான் இருக்கிறது. கல்விதான் ஒருவரின் அனைத்துத் தடைகளையும் தகர்த்து தலைநிமிரச் செய்யும் என்ற கல்வி புரட்சியை தொடங்கி வைத்த நீதிக்கட்சியும், அந்த நீதிக் கட்சி வழிவந்தவர்களும் தான் இதற்கு காரணம். அதனால்தான் கல்விக்கு நாங்கள் அதிக முக்கியத்துவம் தந்து கொண்டிருக்கிறோம். காமராஜரின் காலம் பள்ளிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. கலைஞர் ஆட்சிக்காலம் கல்லூரிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. இன்றைய திராவிட மாடல் ஆட்சியானது உயர் கல்வியின் பொற்காலமாக, ஆராய்ச்சிக் கல்வியின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது. இத்தகைய வாய்ப்பை பெற்றுள்ள மாணவர்கள் இதை நல்லபடியாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவைத் தலைவர் அப்பாவு, அமைச்சர்கள் பொன்முடி, சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், எம்எல்ஏக்கள் டாக்டர் எழிலன், இனிகோ இருதயராஜ், சிறுபான்மையின் நலவாரியத் தலைவர் ஜோ அருண், பீட்டர் அல்போன்ஸ், சென்னை இயேசு சபை மாநில தலைவர் இருதயராஜ், லயோலா கலைமனைகள் அதிபர் அந்தோணி ராபின்சன், லயோலா கல்லூரி செயலர் ஜெயராஜ், கல்லூரியின் முதல்வர் லூயிஸ் ஆரோக்கியராஜ், முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் முனைவர் விஸ்வநாதன், சேவியர் பிரிட்டோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

*Clipping*

**Publication** : Dinamalar  **Date** : Friday, August 2, 2024
**Edition** : Chennai  **Page** : 11

# கல்வியின் முக்கியத்துவத்தை குறைக்கும் பேச்சு ஸ்டாலின் வருத்தம்

**சென்னை, ஆக. 2–**

''கல்வியின் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையிலான பேச்சுக்கள் மீண்டும் எழத் துவங்கி இருக்கின்றன. அதையெல்லாம் அரசியல் களத்தில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். அறிவுக்களத்தில் உள்ள பயணத்தை மாணவர்களாகிய நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்,'' என, முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

சென்னை லயோலா கல்லுாரி நுாற்றாண்டு துவக்க விழாவில், அவர் பேசியதாவது:

இந்தியாவில் எந்த வகைப்பட்ட கல்வி நிறுவனத்தை எடுத்துக் கொண்டாலும், அதில் தலைசிறந்த கல்லுாரிகள், பல்கலைகள், கல்வி நிறுவனங்கள் அதிகம் இருக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது.

காமராஜரின் காலம் பள்ளிக் கல்வியின் பொற்காலமாக இருந்தது. கருணாநிதி ஆட்சி கல்லுாரி கல்வியின் பொற்காலமாக இருந்தது. இன்றைய திராவிட மாடல் ஆட்சி, உயர் கல்வியின் பொற்காலமாக, ஆராய்ச்சி கல்வியின் பொற்காலமாக திகழ்கிறது.

கல்வியின் தேவையை அடுத்தடுத்து வரும் மாணவர்களிடமும், பதிய வைக்க வேண்டும். ஏனென்றால், கல்விக்கான தடைகள், புதிய வடிவங்களில் வர துவங்கி இருக்கின்றன. கல்வியின் முக்கியத்துவத்தை குறைக்கின்ற மாதிரியான பேச்சுக்கள், மீண்டும் எழத் துவங்கி இருக்கின்றன.

அதையெல்லாம் அரசியல் களத்தில் நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். மாணவர்களான நீங்கள் அறிவுக் களத்தில் உள்ள பயணத்தை பார்த்துக் கொள்ளுங்கள்.

இவ்வாறு பேசினார்.

# *Clipping*


| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Publication** | : | Daily Thanthi | **Date** | : | Friday, August 2, 2024 |
| **Edition** | : | Chennai | **Page** | : | 5 |





லயோலா கல்லூரியின் நூற்றாண்டு தொடக்க விழாவில் கலந்து கொண்ட முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியபோது எடுத்த படம்.

# கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வருகின்றன

## முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, ஆக.2-
கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வருகின்றன. அரசியல் களத்தில் அதை நாங்கள் பார்த்து கொள்கிறோம் என்று முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசினார்.

### லயோலா கல்லூரியில் விழா

சென்னை நுங்கம்பாக்கத்தில் உள்ள லயோலா கல்லூரியின் நூற்றாண்டு தொடக்க விழா கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது. விழாவுக்கு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கினார்.

இதில் சபாநாயகர் அப்பாவு, அமைச்சர்கள் பொன்முடி, சேகர்பாபு, மற்றும் தயாநிதி மாறன் எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் டாக்டர் எழிலன், இனிகோ இருதயராஜ், தமிழ்நாடு சிறுபான்மை நல ஆணையத்தின் முன்னாள் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், இயேசு சபை மாநில தலைவர் ஜெபமாலை இருதயராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### அழிக்க முடியாத செல்வம்

விழாவில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

சென்னையை சுற்றி மட்டுமல்லாது, தமிழகம் முழுவதும் ஏராளமான கல்லூரிகளை உருவாக்கியுள்ளோம். ஆனால், நூறு ஆண்டுகளுக்கு முன்பு இந்த நிலை இருந்ததா என்றால் இல்லை.

தமிழகம் முழுவதும் இருந்த கல்லூரிகளை விரல்விட்டு எண்ணிவிடலாம். கல்விதான் அழிக்க முடியாத செல்வம் என்று கூறுகிறோம். ஆனால், அந்த செல்வம் அப்போது எல்லோருக்கும் கிடைக்கவில்லை. கிடைக்கவில்லை என்று சொல்வதைவிட, கொடுக்கப்படவில்லை என்றுதான் சொல்லவேண்டும்.

அப்படிப்பட்ட காலக்கட்டத்தில், சேவை மனப்பான்மையுடன் இந்த லயோலா கல்லூரி தொடங்கப்பட்டு பொருளாதாரத்தில் பின்தங்கிய மாணவர்களுக்கு கல்விக்கண்ணை லயோலா கல்லூரி திறந்து வைத்துள்ளது. இது தமிழகத்துக்கும் பெருமை.

### திராவிட மாடல்

இந்தியாவில் அதிகளவு கல்வி நிறுவனங்கள் இருக்கும் மாநிலமாக தமிழகம் உள்ளது. கல்விதான் ஒருவரின் எல்லா தடைகளையும் தகர்த்து தலை நிமிர செய்யும் என்று உயர்ந்து கல்வி புரட்சியை தொடங்கி வைத்தது நீதிக்கட்சி. அந்த நீதி கட்சி வழிவந்தவர்கள் நாங்கள்.

அதனால்தான், நாங்கள் கல்விக்கு தொடர்ந்து முக்கியத்துவம் வழங்கி வருகிறோம். நான் முதல்வன், புதுமைப் பெண், தமிழ் புதல்வன் போன்ற திட்டங்கள் மூலம் அனைவருக்கும் தரமான கல்வி கிடைத்தால்தான் நாம் திராவிட மாடல் என்று சொல்வதற்கு அர்த்தம் இருக்கும்.

காமராஜரின் ஆட்சிகாலம் பள்ளி கல்வியின் பொற்காலமாக இருந்தது. கருணாநிதியின் ஆட்சி காலம் கல்லூரி கல்வியின் ஆட்சியின் பொற்காலமாக இருந்தது. இன்றைய திராவிட மாடல் ஆட்சி, உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி கல்வியின் பொற்காலமாக திகழ்ந்து வருகிறது. நாங்கள் நாடு ஒளிபெற பாடுபடுகிறோம். நீங்கள் மாணவ சமுதாயம் ஒளிபெற பாடுப்படுகிறீர்கள். லயோலா கல்லூரிக்கு புகழும், பெருமையும் கிடைப்பதுபோல், இங்கு படிக்கும் மாணவர்களுக்கும் அது கிடைக்கவேண்டும்.

### கல்விக்கு தடைகள்

மாணவர்கள் தங்களுக்கு கிடைத்த வாய்ப்பை நன்றாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். கல்வியின் தேவையை அடுத்தடுத்து வரும் மாணவர்களிடம் பதிய வைக்க வேண்டும். ஏனெனில், கல்விக்கான தடைகள் புதிய வடிவங்களில் வருகிறது.

கல்வியின் முக்கியத்துவத்தை குறைக்கும் வகையிலான பேச்சுகள் மீண்டும் எழ தொடங்கி உள்ளது. அதை அரசியல் களத்தில் நாங்கள் பார்த்துக்கொண்டிறோம். மாணவர்கள் அறிவுகள பயணத்தை பார்த்துக் கொள்ளவேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

முன்னதாக லயோலா கல்வி நிறுவனத்தின் அதிபர் ஜெ.அந்தோணி ராபின்சன் வரவேற்று பேசினார். இறுதியில் லயோலா கல்லூரி முதல்வர் ஏ.லூயிஸ் ஆரோக்கிய ராஜ் நன்றி கூறினார்.

### நான் மட்டும் 'மிஸ்' ஆகிவிட்டேன்

விழாவில் முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகையில், "இந்த கல்லூரியில் நான் படிக்காமல் போய்விட்டேனே என்ற கவலையோடு இங்கு வந்து நிற்கிறேன். அப்படியே இந்த கல்லூரியில் நான் சேர்ந்திருந்தாலும் ஒழுங்காக கல்லூரிக்கு வந்திருக்கமாட்டேன். நான் படித்தது மாநில கல்லூரி. அதெல்லாம் சொன்னால் பெரிய கதை. லயோலா என்று சொன்னாலே பெருமைதான். ஒரு கெத்துதான். என்னுடைய மகன், அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் படித்தது இந்த கல்லூரியில்தான். அவர் மட்டுமல்ல, தயாநிதிமாறன் எம்.பி.யும், அவரது சகோதரர் கலாநிதிமாறனும் இந்த கல்லூரியில்தான் படித்தனர். நான் மட்டும்தான் 'மிஸ்' ஆகிவிட்டேன்" என்றார்.



*Clipping*

**Publication** : Mathrubhumi **Date** : Friday, August 2, 2024
**Edition** : Chennai **Page** : 7

# ലയോള കോളേജിന്റെ ശതാബ്ദി ആഘോഷത്തിന് തുടക്കം

ചെന്നൈ ▸ ലയോള കോളേജിന്റെ ഒരുവർഷംനീളുന്ന ശതാബ്ദി ആഘോഷം മുഖ്യമന്ത്രി എം.കെ. സ്റ്റാലിൻ ഉദ്ഘാടനംചെയ്തു. വിദ്യ അഭ്യസിക്കുന്നതിന് പുതിയപ്രതിബന്ധങ്ങൾ സൃഷ്ടിക്കപ്പെടുന്ന കാലമാണിതെന്നും അവയെ തരണംചെയ്യണമെന്നും സ്റ്റാലിൻ പറഞ്ഞു. ഡി.എം.കെ. നേതാവ് എം. കരുണാനിധി ജനിച്ച വർഷത്തിലാണ് ലയോള കോളേജിന് തറക്കല്ലിട്ടതെന്ന് അദ്ദേഹം ചൂണ്ടിക്കാണിച്ചു.

വ്യാഴാഴ്ച വൈകീട്ട് ചെന്നൈയിൽനടന്ന ചടങ്ങിൽ ജസ്യൂട്ട് സഭ ചെന്നൈ പ്രൊവിൻഷ്യൽ ഫാ. എൽ. ജപമാല ഇരുദയരാജ് വിശിഷ്ടാതിഥിയായിരുന്നു. നിയമസഭാ സ്പീക്കർ എം. അപ്പാവ്, മന്ത്രിമാരായ കെ. പൊൻമുടി, പി.കെ. ശേഖർബാബു, ദയാനിധിമാരൻ എം.പി., കോളേജ് പ്രിൻസിപ്പൽ ഡോ. എ. ലൂയിസ് ആരോഗ്യരാജ് തുടങ്ങിയവർ സംസാരിച്ചു.



▶ ചെന്നൈ ലയോള കോളേജിന്റെ ശതാബ്ദി ആഘോഷം മുഖ്യമന്ത്രി എം.കെ. സ്റ്റാലിൻ ഉദ്ഘാടനംചെയ്യുന്നു

ജസ്യൂട്ട് സഭയുടെ നേതൃത്വത്തിൽ 1925 ജൂലായിലാണ് നുങ്കമ്പാക്കത്ത് ലയോള കോളേജ് തുടങ്ങിയത്. 1978-ൽ സ്വയംഭരണ പദവി ലഭിച്ചു. 117 അധ്യാപകരും 182 അനധ്യാപകരും ജോലിചെയ്യുന്ന കോളേജിൽ ഇപ്പോൾ 19 ബിരുദാനന്തരബിരുദ കോഴ്സുകളും 12 ബിരുദകോഴ്സുകളുമുണ്ട്.

# ONLINES

- https://www.thehindu.com/news/national/tamil-nadu/dmk-government-will-continue-prioritising-education-chief-minister-mk-stalin/article68473994.ece
- https://timesofindia.indiatimes.com/city/chennai/stalin-unveils-loyola-colleges-centenary-celebrations/articleshow/112207383.cms
- https://newstodaynet.com/2024/08/02/stalin-inaugurates-loyola-colleges-centenary-fete/
- https://www.newindianexpress.com/amp/story/states/tamil-nadu/2024/Aug/02/its-golden-period-for-education-research-in-tamil-nadu-says-cm-stalin
- https://theprint.in/india/loyola-college-opened-portals-of-learning-for-all-says-tn-cm/2203502/
- https://www.dtnext.in/news/tamilnadu/new-forms-of-deterrence-to-education-manifesting-warns-cm-stalin-797769
- https://www.deccanchronicle.com/southern-states/tamil-nadu-cm-stalin-urges-students-to-uphold-education-amid-challenges-1813810
- https://www.thehindu.com/news/national/tamil-nadu/stalin-recalls-association-with-loyola-college/article37014143.ece
- https://tamil.oneindia.com/news/chennai/my-son-udayanidhi-stalin-studied-at-loyola-college-says-tn-cm-mk-stalin-626539.html
- https://www.kalaignarseithigal.com/tamilnadu/2024/08/01/loyola-college-centenary-inauguration-function-cm-mk-stalin-speech
- https://www.youtube.com/watch?v=UCauhw_hDMY
- https://www.youtube.com/watch?v=ouecREI2KFA
- https://www.youtube.com/watch?v=Xi1QNxo3_pA
- https://www.etvbharat.com/ta/!state/cm-mk-stalin-says-barriers-to-education-come-in-new-forms-tns24080108561
- https://www.youtube.com/watch?v=gLGsws0CNmw
- https://www.youtube.com/watch?v=MKibyixQ4HQ
- https://chanakyaa.in/watch/ShSbqJftw7vjNjA